THE HINDU (TAMIL)
4 APRIL 2021
PAGE 7

மொழிபெயர்ப்பு உள்ளிட்ட கல்விப் பணிக்காக

# புதுவை பல்கலை. முன்னாள் பேராசிரியருக்கு பிரான்ஸின் கொம்மாந்தர் விருது அளிப்பு

புதுச்சேரி

மொழிப்பெயர்ப்பு பணிக்காகவும், பிரெஞ்சு மொழிக்கு ஆற்றிய பணியைப் பாராட்டியும் புதுவைப் பல்கலைக் கழக பிரெஞ்சுத் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஆர். கிருஷ்ணமூர்த்திக்கு பிரெஞ்சு அரசாங்கத்தின் மிகப் பெரிய விருதாகிய 'கொம்மாந்தர்' விருது அளிக்கப்பட்டுள்ளது.

இந்த விருது பிரான்ஸ் நாட்டு தேசியக் கல்வி அமைச்சகத்தால் வழங்கப்பட்டுள்ளது. பரிசளிப்பு விழா பிரெஞ்சு தூதரகத்தில் அண்மையில் நடைபெற்றது.

பிரெஞ்சு மொழிக்கும், மொழிபெயர்ப்புத் துறைக்கும் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஆற்றிய பணியைப் பாராட்டும் விதத்தில் இந்த விருது அளிக்கப்பட்டிருக்கிறது. பிரெஞ்சு கான்சல் ஜென்ரல் லீஸ் தல்போ இவ் விருதை அளித்துள்ளார்.

இதுபற்றி பிரெஞ்சு தூதரக தரப்பில் கூறுகையில், "பிரான்ஸில் கலை, கல்விக்கு 3 முக்கிய விருதுகள் தரப்படுகின்றன. இதில் மூன்றாவதாக உள்ள செவாலியே விருதும், அதற்கு அடுத்த உள்ள ஓஃபீசியே விருதும் பேராசிரியர் கிருஷ்ணமூர்த்திக்கு ஏற்கெனவே தரப்பட்டுள்ளது. தற்போது இப்பணியில் முக்கிய உயரிய விருதான 'கொம்மாந்தர் விருது' தற்போது அளிக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி பிரெஞ்சிலிருந்து தமிழில் 11 மொழி பெயர்ப்பு நூல்களும், தமிழிலிருந்து பிரெஞ்சுக்கு 4 மொழி பெயர்ப்பு நூல்களும் வெளியிட்டிருக்கிறார். அவர் பிரெஞ்சிலிருந்து தமிழில் மொழிபெயர்த்த 'முன் பின் தெரியாத ஒருவனின் வாழ்க்கை' என்னும் நூல் பிரெஞ்சு அரசால் வழங்கப்படும் ரோமண் ரோலண்ட் விருதினை 2019 -ம் ஆண்டு பெற்றிருக்கிறது. மொழிபெயர்ப்பு மட்டுமல்லாமல், பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி பிரெஞ்சு, ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் ஏராளமான கட்டுரைகளும் சிறுகதைகளும் எழுதியிருக்கிறார். அதனால் இம்மூன்று விருதுகளையும் இவர் வென்றுள்ளார்" என்று தெரிவித்தனர்.



▲ பிரெஞ்சு அரசின் 'கொம்மாந்தர்' விருது பெறும் புதுவை பல்கலைக்கழகத்தின் பிரெஞ்சு மொழி துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி.